# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

**C.C. No. 278/2019**

**வழக்கு சாட்சி – அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சந்திசேகர். | ஜாதி | |
| தந்தை பெயர் | ராசைய்யா. | தொழில் | கூலி வேலை. |
| கிராமம் | சத்தியநாதபுரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் | | வயது | 42/2025. |
| மாவட்டம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2025.

**( 1, 2 எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக BNSS பிரிவு 355–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, சத்தியநாதபுரத்தில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதில்லை. இன்று நீதிமன்றத்திற்கு போலீசார் அழைத்ததால் வந்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியைப் பிறழ்சாட்சியாகப் பாவிக்கக்கோரி, அரசுத் தரப்பில் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது:–</u>**

கடந்த 16.01.2019 ம் தேதியன்று அதிகாலை 01.00 மணிக்கு பி.சி. பட்டி போலீசார் குற்ற எண். 24/2019 வழக்கில் சம்பவயிடத்தை என் முன்பாகவும், சின்ராசு என்பவர் முன்பாகவும் பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக இருக்கக் கேட்டுக்கொண்டதன்பேரில், நாங்கள் இருவரும் சாட்சிகள் கையொப்பம் செய்தோம் என்று கூறிவிட்டு, தற்போது நான் எதிரிகளுக்குப் பயந்து உண்மையை மறைத்துப் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.